செய்தி வெளியீடு எண்.32-2017 நாள்: 15.08.2017

# விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் நேமூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

******

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் நேமூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.08.2017) சிறப்பு பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 1099 கிராம ஊராட்சிகளிலும் இன்று கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது. நேமூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு தெரிவித்ததாவது:

நேமூர் கிராமத்தில் உள்ள 318 வீடுகளில் 258 வீடுகளில் தனிநபர் கழிப்பறை கட்டி முடித்து பயன்பாட்டில் உள்ளது. மீதம் உள்ள 60 வீடுகளுக்கு தனிநபர் கழிப்பறை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு மானியமாக ரூ.12,000/- வழங்கி வருகிறது. வீடுகளில் கழிப்பறை கட்டி பயன்படுத்துவதன் மூலம் மக்கள் சுகாதாரமாக வசிக்க முடியும். திறந்த வெளி மலம் கழிக்காத கிராமமாக திகழந்து சுகாதாரத்தில் முன் மாதிரி கிராமமாக விளங்க வேண்டும். அனைவரும் தங்கள் வீடுகளில் தனிநபர் கழிப்பறை கட்டி முடித்துவிடுவோம் என்று பொதுமக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் உறுதியளித்தனர். தேவையற்ற பிளாஸ்டிக் பொருட்கள், தென்னை மட்டைகள், டயர்கள் போன்றவைகளில் தண்ணீர் தேங்குவதால் கொசுக்கள் உருவாகி டெங்கு காய்ச்சல் பரவ காரணமாய் உள்ளது. எனவே இவைகளை தவிர்த்து பொது மக்கள் பாதுகாப்பான முறையில் தண்ணீரை பயன்படுத்த வேண்டும். நேமூர் கிராமத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற படித்த இளைஞர்கள், பெண்கள் மாவட்ட தொழில் மையத்தை அனுகி உரிய முறையில் அரசின் உதவிகளை பெற்று தொழில் தொடங்கலாம். இதற்கு 1 கோடி ரூபாய் நிதி பெருபவர்களுக்கு ரூபாய்.25இலட்சம் மாணியமாக அரசு வழங்குகிறது. தமிழக அரசு படித்த இளைஞர்களுக்காக திறன் வளர் பயிற்சிகளை வழங்கிவருகிறது. இதற்கான பயிற்சித் தொகையை அரசே செலுத்துகிறது. மேலும 2017-18 ஆண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 25,000 குடிசை மாற்று வீடுகள் கட்டி தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நேமூர் கிராம மக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், பாமாயில் போன்றவை அனைத்து வேலை நாட்களிலும் பொதுமக்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல்

வழங்கப்படுகிறதா என்று பொதுமக்களிடம் கேட்டறிந்தார். இதற்கு பொதுமக்கள் நியாயவிலைக் கடைகளில் அரிசி மற்றும் சர்க்கரை எந்த நேரத்தில் சென்று கேட்டாலும் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்படுகிறது என்று தெரிவித்தனர்.

நேமூர் கிராமத்திற்கு நூலகம் மற்றும் சமுதாயக்கூடம் ஆகியவை சரியான முறையில் பராமரிக்க வேண்டும் எனவும், தங்கள் கிராமத்திற்கு இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்ய அரசு மயாணத்திற்கு இடம் எற்படுத்தி தர வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அருகில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மகேந்திரன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ஶ்ரீநிவாசன், வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) திரு.முபாரக் அலி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திரு.அறவாழி வருவாய் வட்டாட்சியர் திரு.மனோகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.